# கற்பகம்

திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00


## குறளமுதம்-84

வள்ளுவன் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-9 அறத்துப்பால் விருந்து ஓம்பல்**

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

முகமலர்ச்சியோடு நல்ல விருந்தினரைப் பேணுகின்ற வனது வீட்டில், திருமகள் மன மகிழ்ந்து நிலையாகத் தங்குவாள்.


மலர்-07 | மே - 2015 | இதழ்-84


### உறுப்புரிமை சங்கங்களின் முன்பள்ளிகளின் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு

# வலிகாமம் கொத்தணி ரூபா 5 இலட்சம் பெறுமதியான சீருடைத்துணி வழங்கியது!

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் உறுப்புரிமைச் சங்கங்களினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி நிலையங்களின் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கும் நிகழ்வு அண்மையில் கொத்தணி மண்டபத்தில் கொத்தணியின் தலைவர் திரு செ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்து 382 மாணவர்களுக்கும், 106 ஆசிரியர்களுக்கும் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன. (2ம் பக்கம் பார்க்க)



# 100 நாள் வேலைத்திட்டம்; கோரிக்கைகள் தொடர்பில் வடக்கு கூட்டுறவு அமைச்சருக்கு மகஜர் கையளிப்பு!

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சரின் நூறுநாள் வேலைத் திட்டத்தின்கீழ் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்கள், கொத்தணிகள் சார்பாக 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கூட்டுறவு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளாவன,

01) யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பனை தென்னை வள நிறுவனங்களுக்கு தனியான கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

02) இதுவரை காலமும் சங்கங்களால் நடத்தப்பட்டுவரும் கள் விற்பனை நிலையங்களை (தவறணைகள்) சங்கத்தின் சொந்தக் காணிகளிலும் அரச காணிகளிலும் தொடர்ந்து இயங்கவும் அதனை நவீன கிளை நிலையுங்களாக அமைப்பதற்கு எவ்விதமான தடைகளுமின்றி விசேட அனுமதிகளை வழங்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

03) இதுவரை காலமும் சங்க நிர்வாக சபை தீர்மானத்துடன் ரூபா 5,000ற்கு உட்பட்ட செலவுகளையே செய்யமுடியும் என இருந்ததை ரூபா 50 ஆயிரம் என மாற்றியமைப்பதற்கான அனுமதியினை வழங்கி உதவவேண்டும்.

[2ம் பக்கம் பார்க்க]

## சமாசத்தின் தேவைகளுக்காக வாகனம்!

சமாசம் உறுப்புரிமை சங்கங்களுடனான செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்காகவும், கல்வி பயிற்சியளிப்பு தொடர்பான செயற்பாடுகளுக்கும் பொருத்தமான வாகனம் ஒன்றை வழங்கி உதவுமாறு பனை அபிவிருத்திச் சபையிடம் சமாசம் நீண்டகாலமாக முன்வைத்த கோரிக்கை இதுவரை நிறைவேறவில்லை.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு கோகுலதாசன் அவர்கள் பொறுப்பேற்றுள்ள நிலையில், இவ்விடயம் சபையின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரிடம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் உரியவர்களிடம் இது சம்பந்தமாக தொடர்புகளை ஏற்படுத்தி சமாசத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான வாகனம் ஒன்றினைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

**சிந்தனைத்துளி**

“இலக்கு இல்லாத கப்பல்கள் எப்போதும் கரை சேர்வதில்லை” -அறிஞர்-

## கற்பகக்கரு

### 93வது கூட்டுறவுதினம்

93வது சர்வதேச கூட்டுறவுதினம் உலக மக்களால் எதிர்வரும் ஜீலை மாதம் முதல் சனிக்கிழமை கொண்டாடப்பட இருக்கின்ற வேளையில், முன்னேற்பாடாக ஒவ்வொரு நாடுகளும் தமது கலை, கலாச்சார, பண்பாட்டு நிகழ்வுகளை கூட்டுறவாளர் மத்தியில் நடாத்துகின்றமை நாம் அறிந்த விடயமே.

அதே போல எமது நாட்டிலும் ஒவ்வொரு வகைப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களும் தமது அங்கத்தவர் மத்தியிலான தமக்கே உரித்தான பாரம்பரிய நிகழ்வுகளை நடாத்தி இக்கூட்டுறவுதினத்தை சிறப்புற கொண்டாடி வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவு சபை, வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், கொத்தணிகள், சங்கங்கள் தமது எல்லைப்பரப்புக்குள் அங்கத்தவர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் கூட்டுறவின் சிறப்புத் தன்மைகளை வெளிக்கொணரும் வகையில் தமது வலுவுக்கு ஏற்ற வகையில் பல போட்டிகளை நடாத்தி வருகின்றமை பாராட்டுக்குரியதே.

மேலும் இப்போட்டிகளில் கூடுதலான பொதுமக்களை ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் அவர்களும் கூட்டுறவு தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதற்கும் தம்மை கூட்டுறவில் இணைத்துக்கொள்வதற்கும் முன்பே கூட்டுறவுத்துறையில் இருப்பவர்கள் தம்மை மேலும் பற்றுள்ளவர்கள் ஆக்குவதற்கும் இவ்விழாவை நடத்துவது அவசியமானதே.

தற்போதைய எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் அதாவது வேலை வாய்ப்பற்ற தன்மையும், இளைஞர், யுவதிகள் பொதுப் பணியில் தம்மை ஈடுபடுத்தாத தன்மையும் இளைஞர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதை தவிர்ப்பதற்கு கிராமங்கள் தோறும் இருக்கின்ற கூட்டுறவு அமைப்புக்கள் தமது அமைப்புக்களில் இளைஞர், யுவதிகளை கூடுதலாக இணைத்து கூட்டுறவின் பண்புகள், கொள்கைகள், அதன் வாயிலாக அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நலன்கள் சார்ந்த விடயங்களை அறிந்துகொள்வதற்கும், இளைஞர், யுவதிகளை கணிசமான அளவு கூட்டுறவுத்துறைக்குள் உள்வாங்கி, அவர்களுக்கு பொருத்தமான பணிகளை வழங்குவதற்கும் உரிய ஏற்பாடுகளை 100 நாள் வேலைத் திட்டத்தில் வடமாகாண கூட்டுறவு அமைச்சு செயற்படுத்தினால் சமூக சீர்கேடுகள் ஏற்படாவண்ணம் இளைஞர்களை நல்வழிப்படுத்தக் கூடியதாக அமையும்.

93வது சர்வதேச கூட்டுறவு நாளில் இக்கூட்டுறவு அமைப்புக்கள் கூட்டுறவு கொள்கைகளின்படி நின்று அங்கத்தவர், பணியாளர், இத்துறை சார்ந்த கூட்டுறவாளர்களின் தேவைகளை பூர்த்திசெய்வதன்மூலம் அனைவரையும் கூட்டுறவில் பற்றுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென கற்பகம் வேண்டி நிற்கின்றது.

“அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்”

ஆசிரியர்

## வலிகாமம் கொத்தணி ............ - 1ம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சமாசத்தின் தலைவர் திரு நா.கணேசன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு விமல்ராஜ், சமாச பொதுமுகாமையாளர் திரு பொ.செல்வராஜா மற்றும் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டு சீருடைத் துணிகளை வழங்கியதுடன், கருத்துரைகளும் வழங்கினார்கள். அத்துடன் சங்கங்களின் நிர்வாகிகள் பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

வலிகாமம் கொத்தணியின் இச்செயற்பாடானது கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை கூட்டுறவு கொள்கையின் 7வது கொள்கையாகிய “சமூகத்தின் மீதான அக்கறை” என்ற கொள்கைக்கு அமைவாக அமைந்துள்ளதாக அனைவராலும் பாராட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 100 நாள் வேலைத்திட்டம்.... 1ம் பக்கத் தொடர்ச்சி

04) சங்க அங்கத்தவர்களினால் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் கள்ளினை பருவ காலங்களின்போது வடிசாலைக்கு அனுப்புவது வழமை. அப்படி அனுப்பப்பட்ட கள்ளில் வடிக்கப்படும் பனஞ்சாராயத்தினை (உள்ளூர் உற்பத்தி) விறபனை செய்வதற்கான விற்பனை நிலையத்துக்கான அனுமதியினை பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும்.

05) இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 16-02-2015ம் திகதிய 6/2015 இலக்கம் கொண்ட சாராயம் மற்றும் பியர் உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்திகளை செய்யும்பொருட்டு மாதாந்தம் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த மதுத்தீர்வை என்ற விடயம் எமது உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடும் வடிசாலைகளுக்கு பொருந்தாது என்பதை தெரிவித்து உரிய வரிகளை நீக்கி வரிச்சலுகை பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும்.

06) அரச வங்கிகளில் எமது சங்கங்களின் அங்கத்தவர் பணியாளர்கள் நலத்திட்டங்கள் சார்பில் நிலையான வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்திற்கு விசேட வட்டிவீதம் கோரிப் பெற்றுத்தருதல் வேண்டும்.

07) பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாகாண சபையில் நிதியம் ஒன்றை உருவாக்கி பணியாளர்களின் மாதாந்த சம்பள உயர்ச்சியை வழங்கி உதவ ஆவன செய்தல் வேண்டும்.

08) மீள் குடியமர்ந்த பிரதேசங்களில் உள்ள சங்கங்கள் தமது தலைமைக் காரியாலயக் கட்டடம் அமைக்க வடக்கு மாகாண சபை நிதியுதவி வழங்கி உதவுதல் வேண்டும்.

09) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் கூட்டுறவுப் பணியாளர் நலன்சார்ந்த 51/2000 சுற்றுநிருபத்தை மீள நடைமுறைப்படுத்தி சங்கங்களில் தற்காலிகமாக பணியாற்றும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்து உதவுதல் வேண்டும்.

10) பனை தென்னை வள உற்பத்திகளை தரப்படுத்தி பதப்படுத்தி சர்வதேச சந்தையில் விற்பனை செய்யக்கூடிய பொருளாக மாற்றுவதற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் நவீன இயந்திர சாதனங்களையும் வழங்கி உதவ ஆவன செய்தல் வேண்டும்.

11) பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் கிளை நிலையங்களில் 10 வருடங்கள் தொடர்ச்சியாக இயங்கி வருவனவற்றுக்கு அனுமதிகளை தடையின்றி வழங்கி உதவவும் அவற்றை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்காதும் இருத்தல்.

12) வடமாகாணத்தில் எமது பனை தென்னை வள நிறுவனங்களின் தேசிய வடிசாலையாக திகழும் திக்கம் வடிசாலையை நவீன முறையில் திருத்தி அமைத்து பனந்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேலோங்க மீள இயக்குவதற்கு நிதியுதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி உதவ முன்வரவேண்டும்.

போன்ற 12 கோரிக்கைகள் சமூக மேம்பாட்டு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு சமாசப் பணிப்பாளர் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம்

1

## ஆரம்ப வரலாறு

உலகில் முதன்முதலாக இங்கிலாந்தின் முதலாளித்துவ மண்ணில்தான் கூட்டுறவு இயக்கம் முக்கிய கொள்கைகளின் அடித்தளத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன அமைப்பாகத் தோன்றி உலகெங்கும் வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்தில் நிலவிய மனித சமுதாயத்திற்கு எதிரான முதலாளித்துவ அச்சுறுத்தல்களே கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்துக்கு மூலவித்தாக அமைந்தன. ஆதலால் நாம் கூட்டுறவு இயக்கத்தின் புனிதத் தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்க ஆரம்ப வரலாற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, சைபிரஸ், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்களை ஒத்த சங்கங்கள் இயங்கியமைக்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஆனால் இவற்றை முக்கிய கொள்கைகளின் அடித்தளத்தில் ஒழுங்கமைத்து உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களாக கொள்ளமுடியாது. முதன் முதலாக இங்கிலாந்தில் 1844ஆம் ஆண்டுதான் கூட்டுறவுச் சங்கம் முக்கிய கொள்கைகளின் அடித்தளத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கமாகத் தோற்றம் பெற்றது. ஆதலால்தான் உலக கூட்டுறவாளர்கள் அனைவரும் 1844ஆம் ஆண்டை உலக கூட்டுறவு இயக்கத்தின் தோற்ற ஆண்டாக ஏற்றுக் கொள்கின்றனர்.

தேவைகள்தான் கண்டுபிடிப்புக்களின் தாயகமாகும். கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கான தேவைகளும் சூழ்நிலைகளும் 19ம் நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்தில் போதியமட்டில் இருந்தமையால்தான் 1844ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றம்பெற்று உலகெங்கும் வளர்ச்சிடைந்தன.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தின் பொருளாதார, சமூக அமைப்பில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களே கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்துக்கு மூலவித்தாக அமைந்தன. 18, 19ஆம் நூற்றாண்டுவரை இங்கிலாந்தில் மானிய முறையிலான பொருளாதார, சமூக அமைப்பு நிலவியது. இப்பொருளாதார அமைப்பில் இங்கிலாந்து ஒரு விவசாய நாடாகவும், சிறுகைத்தொழில் நாடாகவும் விளங்கியது. கைத்தொழில் துறை பெருமளவில் வளர்ச்சியடையவில்லை. மனித சக்தியின் அடிப்படையிலேயே உற்பத்திகள் நடைபெற்றன. இயந்திர சக்திப் பாவனை பெருமளவில் இருக்கவில்லை. உற்பத்திகள் யாவும் இலாப நோக்கமில்லாத சுயதேவைக்காகவே செய்யப்பட்டன. இக்காலப்பகுதி உற்பத்திகள் யாவும் வெளிநாட்டுச் சந்தைகளை நிரப்பவென மேற்கொள்ளப்படாமல் முக்கியமாக சுயதேவையைப் பூர்த்தி செய்யவே உற்பத்தி செய்யப்பட்டன. ஆதலால் இக்காலப்பகுதியில் இலாப நோக்கம், சுரண்டல், சமூக அநீதி என்பன முற்றாக இடம்பெறவில்லை.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவு மறுமலர்ச்சியினால் பல பேரறிஞர்களும், விஞ்ஞானிகளும் தோன்றிப் பல இயந்திரங்களையும் தொழில்நுட்ப சாதனங்களையும் கண்டுபிடித்தனர். காக்கிறைட் என்பவர் நூல் நூற்கும் இயந்திரத்தையும், எட்வேட் காட்றைட் என்பவர் மின் சக்தியையும் கண்டுபிடித்தனர். இதுபோல பல பேறறிஞர்கள் பல இயந்திரங்களையும் சாதனங்களையும் கண்டுபிடித்தனர். இக்கண்டுபிடிப்புக்கள் ஐரோப்பாவின் முக்கியமாக இங்கிலாந்தின் பொருளாதார, சமூகக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

இக்கண்டுபிடிப்புக்களினால் பணம் படைத்த செல்வந்தர்கள் கோடிக்கணக்கான பணத்தை முதலிட்டு பெரிய தொழிற்சாலைகளை நிறுவி அவற்றில் இயந்திர சாதனங்களைப் பொருத்தி, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை நியமித்து பெரும்படியாக்க உற்பத்தியில் ஈடுபட்டனர். இதனால் இங்கிலாந்தின் கைத்தொழில் அமைப்பில் பல பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்களைப் பொருளாதார அறிஞர்கள் கைத்தொழில் புரட்சியென அழைக்கின்றனர். கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட சீர்கேடுகளே கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்துக்கு மூல காரணிகளாக அமைந்தன.

இக்கைத்தொழில் புரட்சியினால் இங்கிலாந்தில் பல பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. பல நூற்றாண்டுகாலமாக மானிய முறைப் பொருளாதார நாடாகவிருந்த இங்கிலாந்து முதலாளித்துவ நாடாகப் படிப்படியாக மாற்றமடைந்து விவசாய நாடாகவிருந்த இங்கிலாந்து உலகில் பெரிய கைத்தொழில் நாடாக மாற்றமடைந்தது. மனித சக்தியால் நடைபெற்ற உற்பத்திகள் யாவும் இயந்திர சாதன உற்பத்திகளாக மாறின. இயந்திர சக்தியுடன் போட்டியிட முடியாத சிறுகைத்தொழில்கள் யாவும் வீழ்ச்சியடைய, பாரிய தொழிற்சாலைகள் தோன்றின. சுயதேவை உற்பத்தி மறைந்து இலாப நோக்க உற்பத்தி தலையெடுத்தது. உள்நாட்டுக்காக நடைபெற்ற உற்பத்திகள் யாவும், வெளிநாட்டுச் சந்தைகளுக்கான உற்பத்திகளாக மாற்றமடைந்தன. இதனால் முதலாளித்துவச் சுரண்டல்களும், சமூக அநீதிகளும் பன்மடங்காக அதிகரித்தன. இப்பொருளாதார மாற்றங்களே கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்துக்கு வழியமைத்தன.

பொருளாதார அமைப்பு மட்டுமல்ல சமூக அமைப்பும் முற்றாக மாற்றப்பட்டது. அரசன், குடிமக்கள், நிலக்கிழார், சிறுநில விவசாயக் குடிமக்கள் என இருந்த சமூக அமைப்பு முதலாளி, தொழிலாளி, செல்வந்தன், ஏழை என்ற சமூக அமைப்பாக மாற்றமடைந்தது. இச் சமூக அமைப்பில் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், பிணக்குகளுமே கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்துக்கு மூலகாரணமாகின.

கைத்தொழில் புரட்சியும், முதலாளித்துவ அமைப்பும் பொருளாதார, சமூக அமைப்பில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. அது எப்படி என்பதை அடுத்த இதழில் பார்ப்போம். **(வளரும்)**

# வடக்கு கூட்டுறவு அமைச்சின் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்திக்காக 100 நாட்களில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள்

01. கூட்டுறவு அமைப்புக்களை வினைத்திறன்மிக்க கட்டமைப்பாக பலப்படுத்தும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்குதல்.
02. தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கிவரும் சங்கங்கள் எதிர்வரும் 03 மாத காலத்தினுள் வருமானம் ஈட்டும் செயற்பாடுகளில் இலாபம் ஈட்டத்தவறும் பட்சத்தில் அச்சங்கங்களின் பணிப்பாளர் சபையுடன் மேலதிகமாக நியமன உறுப்பினர்களை நியமித்தல்.
03. நலிவடைந்துள்ள சங்கங்களின் நலிவுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
04. ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல், ஆளணி அங்கீகாரம் இல்லாத சங்கங்களுக்குப் புதிய ஆளணி அங்கீகாரம்பெறுதல், மற்றும் ஆளணி அதிகரிப்புக்கு ஆவன செய்தல்.
05. புதிய 30 வீத சம்பள உயர்வினை இதுவரை பணியாளருக்கு வழங்காத சங்கங்களை வழங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.
06. இதுவரை பதவி நிர்ணயம் செய்யப்படாத பணயாளர்களுக்கு பதவி நிர்ணயம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
07. மாவட்டங்கள் தோறும் மாவட்டக் கூட்டுறவுச் சபை ஊடாக வேலை வங்கி ஒன்றினை உருவாக்குதல்.
08. கூட்டுறவுத்துறையில் ஆயிரக்கணக்கானோருக்குத் தொழில்வாய்ப்பை உருவாக்கும் வகையில் செயற்றிட்டங்களை உருவாக்குதல்.
09. தேர்தல் நடைபெறாதுள்ள சங்கங்களுக்கு தேர்தலை நடாத்துதல்.
10. பயன்பாட்டிலுள்ள, பயன்பாட்டிலில்லாத அத்துடன் மற்றோர் வசம் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் சொத்து விபரங்களைச் சேகரித்து அவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
11. பயன்பாடற்று இருக்கும் தொழிற்சாலைகளை இயக்குவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
12. கூட்டுறவு தொடர்பான முறைப்பாடுகளை கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெற்று, தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
13. இளைய தலைமுறையினர் உட்பட அதிக எண்ணிக்கையானோரைப் புதிய அங்கத்தவர்களாக கூட்டுறவு அமைப்புக்களில் உள்ளீர்த்தல்.
14. கூட்டுறவுச் சபைகளில் பணியாளர்களின் பிரச்சினையை ஆராயும் பொருட்டு இணக்க சபைகளை உருவாக்குதல்.
15. எவ்வித விசாரணையுமின்றி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பணியாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகாணல்.
16. கிராமிய வங்கி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
17. கூட்டுறவுச் சங்க கிளைகளின் வியாபார நடவடிக்கைகளை நுகர்வோரை மையமாகக் கொண்டு விரிவுபடுத்தல்.
18. கூட்டுறவுத்துறையை நவீனமயப்படுத்துவதற்குரிய ஆலோசனைச் சபைகளை மாவட்ட ரீதியாக உருவாக்கி இக்குழுவின் பரிந்துரைக்கமைய நவீன நவீனமயப்படுத்தலுக்கான செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.
19. கூட்டுறவு அமைப்புக்களின் நெறியாளர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிய கண்ணோட்டத்துடன் செயற்படுவதற்கான பயிற்சிகளை வழங்கி இலக்குகளை நிர்ணயித்து மாதந்தோறும் குறித்த இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
20. ஒவ்வொரு துறைசார்ந்த கூட்டுறவு அமைப்புக்களிலும் சிறப்பாக செயற்படும் சங்கத்தைத் தெரிவுசெய்து அச்சங்கத்தினூடாக புதிய தொழில் முயற்சி ஒன்றை உருவாக்குதல்.
21. கூட்டுறவு அமைப்பின் மேம்பாட்டிற்கென வெளிநாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளல்.
22. கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கம் அவர்களின் நினைவாகத் தபால் தலை (முத்திரை)வெளியிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல்.
23. வேலைத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.

மேற்படி வேலைத்திட்டங்கள் பற்றிய பூரண விபரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவோரும் ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளை தெரிவிக்க விரும்புவோரும் பின்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளுமாறு அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளது

**இணைப்பாளர்,**
**கூட்டுறவு அபிவிருத்திக்கான 100 நாள் வேலைத் திட்டம்,**
**வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**

## மனிதனைப் பற்றிய தகவல்கள்



- சராசரி மனிதனின் குருதியின் அளவு 5.5 லீ.
- மனித உடலிலிருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு 1.5 லீற்றர்.
- மனிதன் ஒருநாளில் அருந்தவேண்டிய நீரின் அளவு 6 லீற்றர்.
- மனித உடலில் உள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் 100,000 கிலோ மீற்றர்.
- மனித உடலில் மிகவும் குளிரான பகுதி மூக்கு.
- மனித உடலில் வியர்க்காத உறுப்பு உதடு.
- மனித உடலின் சிவப்பு அணுக்களின் சராசரி ஆயுட் காலம் 120 நாட்கள்.
- இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கும் நேரம் 20 நிமிடங்கள்.
- மனித நகம் வளரும் வருட சராசரி அளவு 12.5 அங்குலம்.
- மனித உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை 200,000

# நிகழ்வுகளின் நிழல்கள்

வலிகாமம் கொத்தணி அதனது உறுப்புரிமைச் சங்கங்களால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு அண்மையில் இலவச சீருடைத்துணி வழங்கிய நிகழ்வின்போது



## விளம்பரம் அனுப்புமாறு வேண்டுகோள்!

யாழ். மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு "தீபம்" எனும் மலரினை வெளியிட பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு, சங்கம் கோரிய விளம்பரங்களை விரைவாக அனுப்பி உதவுமாறு சங்கங்கள், கொத்தணிகளிடம் மேற்படி பணியாளர் நலன்புரிச் சங்க நிர்வாகம் கோரியுள்ளது.

## ஆளணி அங்கீகாரம்பெற அறிவுறுத்து!

வடமராட்சி கிழக்கு, அனலைதீவு ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை காலமும் ஆளணித் திரட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு குறித்த சங்கங்களை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

## சமாசத்தின் ஜூன் மாதத்துக்கான கல்விப் பயிற்சிகள்!

சமாசத்தின் ஜூன் மாதத்துக்கான கல்விப் பயிற்சிகளை பின்வரும் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமாச மட்டப் பயிற்சியில் கரவெட்டி, வேலணை, சுன்னாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, சமாசம் ஆகியவற்றின் நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியினை ஜூன் மாதம் 12ம் திகதியும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 16ம் திகதி சுன்னாகம் சங்கத்தின் சகல பணியாளர்களுக்கான பயிற்சியும், 27ம் திகதி அச்சுவேலி பணியாளர்களுக்குமான பயிற்சியினையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொது அறிவுத் தகவல்கள்

- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம் பனாமா கால்வாய்.
- விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு ஜெர்மனி.
- திரவத் தங்கம் என அழைக்கப்படுவது பெற்றோலியம்.
- தபால் தலையை வட்டவடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
- உடலில் இரத்தம் பாயாத உறுப்பு கருவிழி.
- உலகில் மிகப் பெரிய பூங்கா கனடாவில் உள்ள உட்பெல்லா நாஷனல் பூங்கா.
- உலகில் மிகப் பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள டொராண்டோ உயிரியல் பூங்கா.
- இந்தியாவின் முதல் அணு மின்நிலையம் தாராப்பூரில் அமைக்கப்பட்டது.
- ஆபிரிக்கா கண்டத்தில் மட்டுமே வரிக குதிரைகள் காணப்படுகின்றன.
- மேகங்களின் வீடு என்று அழைக்கப்படுவது மேகால்யா.
- உலகிலே எண்ணெய் வளம் மிக்க நாடு சவூதி அரேபியா. உலகின் 20 சதவீத (ஏறத்தாழ 26,410 கோடி பரல்) எண் ணெய் பூமிக்கடியில் உள்ளது.
- 2004ம் ஆண்டு முதல் உலக கோப்பைக்கான கபடிப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

## 93வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு வடமாகாண சமாசத்தால் நடத்தப்படவுள்ள அங்கத்தவர், பணியாளர் உள்ளிட்டோருக்கான போட்டிகள்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 93வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு தமது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்களின் மத்தியில் போட்டிகளை நடத்தி வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான விளக்கங்கள் விதிமுறைகளை சமாசம் குறித்த சங்கங்கள் மற்றும் கொத்தணிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. அதன் விபரம் வருமாறு,

**அங்கத்தவர்களுக்கான போட்டிகள்:-**

01) **பேச்சுப் போட்டி** (5 – 7 நிமிடங்கள்)
"தன்னலமற்ற தலைமையே கூட்டுறவை வளப்படுத்தும்"

02) **கவிதைப் போட்டி** (3 – 5 நிமிடங்கள்)
"ஒற்றுமையே பலம்"

03) **கட்டுரைப் போட்டி** (01 மணித்தியாலம்)
"பன பலம் பெறுவோம் பனை வளத்தால்"
(குறைந்தது 200 சொற்கள் இருத்தல் வேண்டும்)

**பணியாளர்களுக்கான போட்டிகள்:-**

01) **பேச்சுப் போட்டி** (5 – 7 நிமிடங்கள்)
"கூட்டுறவில் இன்றைய தேவை மன மாற்றமே"

02) **கவிதைப் போட்டி** (3 – 5 நிமிடங்கள்)
"செல்வத்துள் சிறந்த செல்வம் பனைச்செல்வம்"

03) **கட்டுரைப் போட்டி** (01 மணித்தியாலம்)
"எதிர்காலக் கூட்டுறவு இளையோர் கையில்"
(குறைந்தது 200 சொற்கள் இருத்தல் வேண்டும்)

**மகளிர்குழு உறுப்பினர்களுக்கான போட்டிகள்:-**

01) **பேச்சுப் போட்டி** (5 – 7 நிமிடங்கள்)
"பெண் தலைமைத்துவத்தை உருவாக்கியது கூட்டுறவே"

02) **கவிதைப் போட்டி** (3 – 5 நிமிடங்கள்)
"பசியைப் போக்கும் பனைவளம்"

03) **கட்டுரைப் போட்டி** (01 மணித்தியாலம்)
"மனை வளம் சிறக்க பனைவளம் பெருக்கு"
(குறைந்தது 150 சொற்கள் இருத்தல் வேண்டும்)

**முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்:-**

01) **திருக்குறள் மனனப் போட்டி**
அதிகாரம் 1 – கடவுள் வாழ்த்து (1–10 வரையான குறள்)

02) **குழு நடனப் போட்டி**
பாடல்: பனை, தென்னை வளங்களின் சிறப்பையும், தமிழர் பண்பாட்டையும், கூட்டுறவின் பண்பினையும் உள்ளடக்கி இருத்தல்.

**அங்கத்தவர்/பணியாளர்களுக்கான போட்டிகள்:-**

01) **கயிறிழுத்தல் போட்டி** (ஆண்கள்)

02) **மென்பந்து துடுப்பாட்டப் போட்டி** (ஆண்கள்)

03) **கயிறிழுத்தல் போட்டி** (பெண்கள்)

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் உறுப்பினர், பணியாளர்

# சகாய நிதிய நடைமுறைவிதி

சென்ற இதழ் தொடர்ச்சி

**இத்திட்டத்தில் இணைபவர் பெறும் நன்மைகள்**

இத்திட்டத்தில் முறைப்படி இணைந்துகொண்ட உறுப்பினர் ஒருவர் விபத்து மரணம் அடைந்தால் அவருக்கு ரூபா 200,000.00 (2 இலட்சம் ரூபா) வழங்கப்படும்.

உறுப்பினர் ஒருவர் விபத்துக்குட்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா 500.00 தொடக்கம் 1,000.00 வரை வழங்கப்படும். இந்நிதி 7 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும் இதற்கான விண்ணப்பத்துடன் அரசாங்க மருத்துவரின் மருத்தவச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய சங்கத்தின் பாதிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது பின்னுரித்தாளரின் கோரிக்கைக் கடிதம், சங்க நெறியாளர் குழு தீர்மானங்கள், உரிய ஆவணங்கள், சங்கத் தலைவர், பொதுமுகாமையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு சமாசத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

21 நாட்களுக்குள் சமாசத்துக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சகாய நிதிய உபகுழுவில் ஆராய்ந்து பின்னர் சமாசப் பணிப்பாளர் சபைக்கு விதந்துரைத்து, அதனை பணிப்பாளர் சபை ஆராய்ந்து, உரிய அனுமதிகளை பெற்று பாதிக்கப்பட்டவருக்கு நிதி கிடைக்க துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கு சமாசம் பொறுப்புடையதாகும்.

**ஏ) சகாய நிதி பெறத் தகைமையுடையவர்கள்**

1. திடீர் விபத்து மரணம் (வாகனத்தால் எற்படுதல்)
2. தொழில்புரியும்போது மரத்தால் வீழ்ந்து மரணம் ஏற்படின்.
3. கொலை செய்யப்பட்டு மரணம் ஏற்படின்.
4. தவறுதலாக நீரில் மூழ்கி மரணம் ஏற்படின்.
5. மின்சாரம் தாக்கி மரணம் ஏற்படின.
6. தீயால் ஏற்படும் மரணம்.
7. இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் மரணம்.
8. விஷ ஜந்துகளால் ஏற்படும் மரணம்.

**ஐ)** மேற்கூறப்பட்ட "ஏ" பகுதியின் விபரங்கள் யாவும் அரச மருத்துவரினால் உறுதிசெய்யப்பட்டு மரண சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே இதற்கான நிதி வழங்கப்பட வேண்டும். சட்ட ரீதியான பின்னுரித்தாளிக்கு இந்நிதியினை வழங்க சமாசம் பொறுப்புடையதாகும்.

**ஒ) திட்ட செலவு விபரம்**

இத்திட்டத்தினை செயற்படுத்தும் சமாசம் அதற்கான காகிதாதி, நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையதாகும்.

**ஓ) சகாய நிதிய பகிர்வு**

மேற்படி திட்டத்துக்கு வருட முடிவில் இலாபமாக கிடைக்கும் நிதி பின்வரும் விகிதாசாரப்படி பகிரப்பட வேண்டும்.

01) சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகாய நிதியத்துக்கு 50%.

02) சமாச விபத்து ஓய்வூதிய நலத்திட்டத்துக்கும், யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிச் சங்கத்துக்கும் அவர்களது பங்களிப்புக்கு ஏற்ப நிதிப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

இப்பகிர்வுகள் சயாக நிதிய உப சபையாலும் பின்னர் சமாசப் பணிப்பாளர் சபையினாலும் ஆராயப்பட்டு பொதுச்சபைக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஔ) 1. திட்ட மீளாய்வு**

இத்திட்டமானது 01-04-2015ம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் இணைந்த ஒருவர் ஒரு வருடம் மட்டுமே நலன்களை பெறமுடியும். அடுத்த ஆண்டுக்கான நலன்கள் பெறவேண்டுமானால் ஏற்கனவே இணைந்த உறுப்பினராக இருப்பின் அவருக்கு முன் வழங்கப்பட்ட இலக்கம் வழங்கப்படும். அந்த இலக்கம் ஔ 2 இல் குறிப்பிட்டுள்ளவாறு அமையும். மேலும் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் ஒரு உறுப்பினர் இத்திட்டத்தில் இணைந்து கொண்டால் அவருக்கு 5 ஆண்டுகள் நிறைவில் பாதிப்புக் கொடை எதுவும் பெறாதவராயின் ஊக்குவிப்பு ஒன்றை வழங்கி உதவ சமாச நிர்வாகம் பொறுப்புடையதாகும்.

**ஔ) 2. திட்ட மீளாய்வு**

சகாய நிதிய திட்டமானது 01-04-2015ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் இணைந்த ஒருவர் தமது பங்களிப்பு நிதியினை செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் மட்டுமே தமது நலன்களைப் பெற தகுதியுடையவராவார். இத்திட்டத்தில் இணைந்தவருக்கு பின்வரும் ஒழுங்கில் சகாய நிதிய இலக்கம் வழங்கப்பட வேண்டும்.

M/ தொடர் இலக்கம் (அங்கத்தவர் ஆயின்) சங்கப் பெயர்

E/ தொடர் இலக்கம் (பணியாளர் ஆயின்)

F/ தொடர் இலக்கம் (குடும்ப உறுப்பினராயின்)

O/ தொடர் இலக்கம் (ஏனையவர்களாயின்)

**ஔ) 3. நடைமுறைவிதித் திருத்தம்**

இந் நடைமுறைவிதி திருத்தமானது வருடாந்தம் மேற்கொள்ள முடியும். இந்நடைமுறை விதியை திருத்தவோ அல்லது கால மாற்றங்களுக்கேற்ப புதிய விடயங்களை சேர்க்கவோ அல்லது நடைமுறை விதியில் உள்ளவற்றை விலக்கவோ முடியும். இத்திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக சமாசப் பணிப்பாளர் சபை உறுப்புரிமை சங்கங்களின் ஆலோசனைகளையும் விசேட உப குழுக்களின் ஆலோசனைகளையும் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆலோசனைகளையும் பெற்று சமாசப் பொதுச்சபைக்கு சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இத்திருத்தங்களுக்கான அனுமதியினை கூ.அ.உ.ஆணையாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**ஔ) 4.** மேற்படி (ஏ) பகுதியில் குறிப்பிடப்பட்ட பாதிப்புக்களையும், ஊ-2 பகுதியில் குறிப்பிடப்பட்ட பாதிப்புக்கான கொடை வழங்கல் தொடர்பிலும் சமாச சகாய நலத்திட்ட (8ம் பக்கம் பார்க்க)

## பதவி வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை!

சில பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பொதுமுகாமையாளர், கணக்காளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை நிப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அச்சங்கங்களின் நிர்வாகத்தை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு சு.கணேஸ் கேட்டுள்ளார்.

சுன்னாகம், கோண்டாவில், பண்டத்தரிப்பு, தென்மராட்சி கொத்தணி, வேலனை, கொடிகாமம், யாழ்ப்பாணம், மானிப்பாய், கரவெட்டி, ஊர்காவற்றுறை ஆகிய சங்கங்களிலேயே மேற்படி பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன.

**சகாய நிதிய ............... 7ம் பக்கத் தொடர்ச்சி**

உபகுழு உறுப்பினர்கள் நேரடியாக பாதிக்கப்பட்ட உறுப்பினரை பார்வையிட்டு பாதிப்பின் தன்மையினை தமது அறிக்கைமூலம் சமாச நிர்வாகத்துக்கு வழங்க வேண்டும். சமாச நிர்வாகம் துரிதமாக செயற்பட்டு பாதிக்கப்பட்டவருக்கு நிதி கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

**ஔ) 5.** சகாய நிதிக்குழு தெரிவு பின்வரும் ஒழுங்கில் ஒவ்வொரு வருடத்தின் இறுதி மாதத்தின் நடுப்பகுதிக்குள் சமாச நிர்வாக சபையால் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பிவைக்க சமாசம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உபகுழு உறுப்பினர்கள் 9 பேர்

| | |
|---|---|
| வலிகாமம் கொத்தணி | - 3 பிரதிநிதிகள் |
| வடமராட்சி கொத்தணி | - 2 பிரதிநிதிகள் |
| தென்மராட்சி கொத்தணி | - 1 பிரதிநிதி |
| யாழ். கொத்தணி | - 2 பிரதிநிதிகள் |
| சமாசம் | - 1 பிரதிநிதி |

## எண்ணெய் ஆலை அமைக்குமாறு யோசனை

தென்மராட்சிப் பகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக காணப்படுவதால் தென்மராட்சி கொத்தணி தேங்காய்களைக் கொள்வனவு செய்து தேங்காய் எண்ணெய் வடிக்கும் ஆலை ஒன்றை உருவாக்க முயற்சி எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் திரு சு.கணேஸ் கேட்டுள்ளார். அதேபோல அச்சுவேலி, பருத்தித்துறை சங்கங்கள் தமக்கு சொந்தமாக உள்ள பொருத்தமான காணிகளில் தென்னம் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் உதவி ஆணையாளர் குறித்த சங்கங்களை கேட்டுள்ளார்.

## 100 நாள் திட்டத்தில் 23 விடயங்கள் உள்ளடக்கம்!

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் திரு ஐங்கரநேசன் அவர்களினால் அறிவிக்கப்பட்ட கூட்டுறவுத்துறையை விருத்திசெய்யும் நோக்கிலான 100 நாள் வேலைத் திட்டத்தில் 23 விடயங்கள் உள்ளடக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் யாவும் கூட்டுறவுத்துறை சார்ந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், இத்துறை சார்ந்தோர்களுடைய குறைகளை நீக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூட்டுறவாளர்களால் பாராட்டப்படுகின்றது.

கடமையின் நிமித்தம் நியமிக்கப்படுபவர்கள்
சமாசப் பொதுமுகாமையாளர், சமாச கணக்காளர், சமாச கல்வி உத்தியோகத்தர்

சமாசப் பணிப்பாளர் சபையினரால் 21-01-2015ம் திகதி ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு 29.01.2015ம திகதிய வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து பொதுச்சபையின் அனுமதி பெறப்பட்டு 27.02.2015ம் திகதிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் 01.04.2015ம் திகதியிலிருந்து இந் நடைமுறை விதி அமுல்படுத்தப்படுகிறது. (முற்றும்)






இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2015ம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்டது.